Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

C.C. No: 114 of 2024

DATE :08.04.2025

Depositions of witness for Prosecution

PW: 1

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. முத்துச்சாமி | Caste | |
| Father/Husband's Name | சங்கு | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 8th day of April 2025

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. அவர் தரப்பில் U/s.317 Cr.P.C Petition filed and allowed.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை –**

எனக்கு தற்போது வயது 80 என்றால் தோராயமாக 75. வயது முதிர்வின் காரணமாக பொதுவாக காது கேட்கும் திறன், பார்க்கும் திறன், நடை போன்ற செயல்கள் குறையும் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடம் தோப்பு என்றால் சரிதான். பொதுவாக தோப்பில் ஒரு மரத்திற்கும், மற்றொரு மரத்திற்கும் இடையில் சுமார் 10 அடி தூரம் இடைவெளி இருக்குமா என்றால் 20 அடி இருக்கும். தோப்பு என்றால் புல், மட்டை, செத்தை, குலை, கொப்புகள் இருக்கும் என்றால் இருக்காது. நான் தோப்புக்கு போகும்போது கம்பு ஊன்றி தான் செல்வேன் என்றால் சரிதான். எனது மகன் முத்துச்செல்வம் சிவகாசியில் வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். எனது மகன் தினமும் காலை 9.00 மணிக்கு போய் விட்டு மாலை 4.00 மணிக்கு வீட்டுக்குத் திரும்பி வருவார். சாட்சி ஸ்ரீராம் என்பவருக்கு 90% சரியாக காது கேட்காது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த நாளில் எனது மனைவி ஈக்கி கிழித்துக் கொண்டு இருந்தார் என்றால் சரிதான். கூமாப்பட்டி புறக் காவல் நிலையத்தை கடந்து தான் அரசு மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான்.

கூமாப்பட்டியில் பொதுவாக கூலி வேலைக்கு செல்பவர்கள் காலை 8.00 மணிக்கு வந்து மதியம் 2.00 மணிக்கு வீடு திரும்புவார்கள் என்றால் வேலையை பொறுத்து 4.00 மணி வரை வேலை செய்வார்கள். ஆஜர் எதிரி பொதுவாக ஜல்லிக்கட்டு மாடு, ஆடு, கோழி போன்றவைகளை வளர்த்து வருகிறார் என்றால் சரிதான். எனது

வயலுக்கும், ஆஜர் எதிரி வயலுக்கும் இடையே வேலி உள்ளதா என்றால் சம்பவம் நடந்த போது இல்லை ஆனால் தற்போது வேலி உள்ளது. ஆஜர் எதிரி என்னை எந்தக் கன்னத்தில் அடித்தார் என்றால் இடது கன்னத்தில் அறைந்தார். 2ம் எதிரி என்னை எங்கிருந்து அடித்தார் என்றால் நெற்றியில் அடித்தார். காயம்பட்ட நாளில் என்னை மருத்துவமனைக்கு யார் அழைத்துச் சென்றார்கள் என்றால் ஸ்ரீராம், முத்துசெல்வம் ஆகியோர்கள் அழைத்து சென்றார்கள். ஏற்கனவே மாடு முட்டிய பிரச்சனை சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், ஆஜர் எதிரி இளம் வயதிலேயே ஆடு, மாடு வைத்து நல்ல நிலைமையில் இருப்பதாலும், எனக்கு தண்ணீர் பற்றாக்குறை தோப்பில் இருப்பதால் எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யாக மனுத்தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த தேதியில் எனது மகன் சிவகாசிக்கு வேலைக்கு சென்றதாகவும், அவ்வாறு நான் சொல்வது போல அவர் வேலைக்கு செல்லாமல் இருந்தால் எனது மகன் தான் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருப்பார் என்று சொன்னால் சரியல்ல.

எனது வயது முதிர்வின் காரணமாகவும், தோப்பில் இருக்கும் குலை, கொப்புகள் சிக்கி கீழே விழுந்து விட்டு பொய்யாக எதிரிகள் மீது புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நெடுங்குளம் ஊருக்கும், சம்பவம் நடந்ததாக சொல்லும் தோப்புக்கும் சுமார் அரை கி.மீ இருக்கும் என்றால் சரிதான். 1ம் எதிரி ஜல்லிக்கட்டு மாடு வளர்த்து வருவதால் பொது மக்கள் பாதுகாப்புக்காக கட்டிப் போட்டுத் தான் வளர்ப்பார் என்றும் நான் தான் எனது மாடுகளை எனது தோப்பில் அவிழ்த்துவிட்டு மேய்ப்பேன் என்றால் சரியல்ல. எனது வயது முதிர்வின் காரணமாகவும் நான் கம்பின் உதவியுடன் நடக்கின்ற காரணத்தினாலும் தடுக்கி கீழே விழுவதற்கு அதிகம் வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/−எம்.இராமநாதன்/
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

C.C. No: 114 of 2024

DATE :08.04.2025

Depositions of witness for Prosecution

PW: 2

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி. குருவம்மாள் | Caste | |
| Father/Husband's Name | முத்துச்சாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 8th day of April 2025

1 ம் எதிரி ஆஜர். 2 ம் எதிரி ஆஜரில்லை. அவர் தரப்பில் U/s.317 Cr.P.C Petition filed and allowed.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை –**

எனக்கு தோப்பில் ஈக்கி கிழிக்கும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த நாளில் எனது தோப்பில் உள்ள வைக்கோல் படப்புக்குப் பின்னால் நான் ஈக்கி கிழித்துக் கொண்டு இருந்தேன் என்றால் சரியல்ல. சம்பவ நாளில் நான், எனது மகன், சாட்சி ஸ்ரீராம் உடன் இருந்தார்கள் என்றால் இல்லை நான் மட்டும் தான் இருந்தேன். கூமாப்பட்டியில் கூலி வேலைக்கு போய் வருபவர்கள் எத்தனை மணிக்கு சென்று எத்தனை மணிக்கு வருவார்கள் என்றால் கணக்கு கிடையாது. தோப்பில் பொதுவாக செத்தை, மட்டை, பாலை இருக்கும் என்றால் சரிதான். எனது கணவர் தோப்பிற்கு வருதற்கு கம்பு ஊன்றி தான் நடப்பார் என்றால் சரிதான். தோப்பு மேடு, பள்ளமாக இருக்கும் என்றால் சரிதான். எனது மகன் முத்துச் செல்வம் தினமும் சிவகாசிக்கு வேலைக்கு சென்று விடுவார் என்றால் சரிதான். சம்பவம் நடந்த நாளில் என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் நான் மட்டும் தான் இருந்தேன். சாட்சி ஸ்ரீராம் அவருடைய தோப்பில் இருந்தார். புகாரிலும், வாக்குமூலத்திலும் சாட்சி ஸ்ரீராம் சம்பவ தேதியில் எங்களது தோப்பிற்கு வேலைக்கு வந்திருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சி ஸ்ரீராம் அவருடைய தோப்பில் இருந்தார். சம்பவ நாளில் எனது மகன் முத்து செல்வம் என்னுடன் இருந்தாரா அல்லது சிவகாசிக்கு வேலைக்கு சென்றிருந்தாரா என்றால் சம்பவம் நடந்த பின் தான் வந்தார்.

சாட்சி ஸ்ரீராமுக்கு சரியாக காது கேட்காது என்றால் சரிதான். காயம்பட்ட அசா.1 ஐ மருத்துவமனைக்கு யார் அழைத்து சென்றார்கள் என்றால் சாட்சி ஸ்ரீராம் அழைத்து சென்றார். எனது மகன் முத்து செல்வம் உடன் இருந்தாரா என்றால் பின்னர் தான் வந்தார். அசா.1 ஐ எதிரி அடித்தது எந்தக் கன்னத்தில் என்றால் எனக்கு ஞாபகமில்லை. 2ம் எதிரி மண்வெட்டியை வைத்து அடித்ததாக சொல்லியுள்ள நிலையில் மண்வெட்டி கணையை வைத்து அடித்தாரா அல்லது இரும்பு பூணுால் பகுதியை வைத்து அடித்தாரா என்றால் இரும்பு பூணுாலால் ஆன பகுதி. சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், சம்பவ நேரத்தில் நான் ஈக்கி கிழித்துக் கொண்டு இருந்ததாகவும், எனது கணவரின் சத்தம் கேட்டுத்தான் நான் சாட்சி ஸ்ரீராமை அழைத்து வந்தேன் என்றால் சரிதான். (ஆஜர் எதிரி எனக்காகத்தான் எனது கணவரை உயிருடன் விட்டு விட்டதாக என்னிடம் கூறியதாக சாட்சியம் அளிக்கிறார்). சம்பவம் உண்மையாக நடந்திருந்தால் நான் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு சென்றிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரி எனது கணவரை அடிக்கவில்லை என்றாலும் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி தான் எனது கணவரை அடித்து விட்டு என்னிடம் வந்து சொன்னார்.

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஓம்/–எம்.இராமநாதன்/
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு